இராமநாதபுரம் மாவட்டம், தொண்டி, அமீர் சுல்தான் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் நேற்று (06.09.2025) மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் .மா.சுப்பிரமணியன் புதிய மருத்துவக் கட்டடங்களை திறந்து வைத்து, அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கி உரையாற்றினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் .சிம்ரன்ஜீத் சிங் காலோன், , இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் .கே.நவாஸ்கனி , இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம், திருவாடானை சட்டமன்ற உறுப்பினர் .இராம.கருமாணிக்கம் , பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் .செ.முருகேசன் ஆகியோர் உள்ளனர்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் 27 புதிய திட்டப் பணிகள்

நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம்!

அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் - ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் தொடங்கி வைத்தனர்!

இராமநாதபுரம், செப். 7 -

இராமநாதபுரம் மாவட்டம், தொண்டி, அமீர் சுல்தான் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் நேற்று (06.09.2025) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் மூலம் நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம் மற்றும் மருத்துவ கட்டடங்கள் திறந்து வைத்து புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி மருத்துவ உபகரணங்கள் வழங்கும் விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், முன்னிலை வகித்தார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் ஆகியோர் தலைமையேற்று புதிய மருத்துவக் கட்டடங்களை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி வைத்தும், மருத்துவ உபகரணங்கள் வழங்கி நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமை பார்வையிட்டனர்.

இந்நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசுகையில்

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் மூலம் இராமநாதபுரம் மாவட்டத்தில் ரூ.8.87 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட 16 புதிய மருத்துவக் கட்டடங்கள் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

(இராமநாதபுரம் தொகுதி) 1. இராமநாதபுரம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் ரூ.1.05 கோடி மதிப்பீட்டில் Flat C ARM கருவியும், 2. இராமநாதபுரம் அரசு மருத்துவ மருத்துவமனையில் கல்லூரி ரூ.59 இலட்சம் மதிப்பீட்டில் ஆர்த்தோஸ்கோப்பி கருவியும், 3. இராமநாதபுரம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் Radio Frequiency Ablation கருவியும், 4. ரூ.உ.மங்கை ரூ.50 இலட்சம் BPHU, 5. பெரியபட்டினம் புறநோயளிகள் பிரிவு கட்டிடம் PHC ரூ.48 இலட்சம் மதிப்பீட்டிலும், 6. தினைக்குளம் HSC ரூ.30 இலட்சம் மதிப்பீட்டிலும், 7. பனையடியேந்தல் HSC ரூ.30 இலட்சம் மதிப்பீட்டிலும், 8. ரூ.80 இலட்சம் இராமேஸ்வரம் UPHC, 9. ரூ.75 இலட்சம் இராமநாதபுரம் UPHC, (திருவாடானை தொகுதி) 10.ரூ.1.20 கோடி ஆர்.எஸ்.மங்கலம் PHC, 11. ரூ.50 இலட்சம் ஆர்.எஸ்.மங்கலம் BPHU, 12.ரூ.30 இலட்சம் மங்களக்குடி HSC, (முதுகுளத்தூர் தொகுதி) 13.ரூ.30 இலட்சம் T.M. கோட்டை HSC, (பரமக்குடி தொகுதி) 14. ரூ.50 இலட்சம் நயினார்கோவில் BPHU, 15.ரூ.75 இலட்சம் பாரதியார் பார்க் UPHC, 16.ரூ.20 இலட்சம் பனையூர் HSC என மக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் ரூ.32.70 கோடி மதிப்பீட்டில் 11 புதிய மருத்துவ கட்டடங்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் வழங்குவதற்கான திட்டப்பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

(இராமநாதபுரம் தொகுதி) 1.இராமநாதபுரம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் ரூ.27 கோடி LINAC Radio Theraphy கருவியுடன் புதிய கட்டடம், 2. ரூ.75 இலட்சம் தங்கச்சிமடம் PHC கட்டடம், 3. ரூ.45 இலட்சம் கழுகூரணி HSC, 4. ரூ.45 இலட்சம் வேளானூர் HSC, 5. ரூ.45 இலட்சம் சின்னபாளையரேந்தல் HSC, (முதுகுளத்தூர் தொகுதி) 6. ரூ.5.50 கோடி மதிப்பீட்டில் முதுகுளத்தூர் அரசு மருத்துவமனையில் புதிய கட்டடம், 7. ரூ.45 இலட்சம் இலந்தைக்குளம் HSC, 8. ரூ.45 இலட்சம் எம்.கரிசல்குளம் HSC, 9. ரூ.45 இலட்சம் மகிண்டி HSC, (திருவாடானை தொகுதி), 10.ரூ.75 இலட்சம் ஆர்.எஸ்.மங்கலம் PHC கூடுதல் கட்டடம், (பரமக்குடி தொகுதி) 11.ரூ.45 இலட்சம் பொட்டகவயல் HSC ஆக மொத்தம் 11 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டுள்ளது.

இன்று மட்டும் ரூ.41.57 கோடி மதிப்பீட்டில் 27 பணிகள் மக்கள் பயன்பாட்டிற்காக செயல்படுத்தப்பட்டுள்ளது. இது மட்டுமின்றி கடந்த நான்கு ஆண்டுகளில் பொது சுகாதாரத்துறையின் மூலம் 363.73 கோடி மதிப்பீட்டில் திட்டப்பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளது. 345.40 கோடி மதிப்பீட்டில் பொது சுகாதாரத்துறையின் மூலம் பணிகள் நடைபெற்று வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்கள் ஆரோக்கியமுடன் இருந்திட வேண்டும் என்ற நோக்குடன் இத்தகைய திட்டங்களை வழங்கி தமிழகம் மருத்துவத்துறையில் முதலிடத்தில் உள்ளது என்றால் அத்தகைய பெருமை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கே சேரும்.

இதுமட்டுமின்றி எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம் துவங்கப்பட்டு தமிழ்நாடு முழுவதும் ஒவ்வொரு சனிக்கிழமை தோறும் இந்த சிறப்பு மருத்துவ முகாம் நடைபெறுகிறது. இம்முகாமை பொருத்தவரை பொதுமக்களுக்கு முழு உடல் பரிசோதனை செய்து அவர்கள் ஆரோக்கியம் பாதுகாக்கப்படுவதாகும்.

"நலம் காக்கும் ஸ்டாலின்" எனும் திட்டம் மக்களைத் தேடி முழு உடல் பரிசோதனை திட்டம் என்கிற வகையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. முழு உடல் பரிசோதனை செய்து கொள்வதற்கு தனியார் மருத்துவமனைகளில் ரூ.15,000/ வரையிலும், அரசு மருத்துவமனைகளில் ரூ.4,000/ வரை செலவாகும். முழு உடற்பரிசோதனை என்பது இன்றைய காலகட்டத்தில் மக்களுக்கு மிகவும் அவசியமான ஒன்றாகும். அந்த வகையில் இத்திட்டம் பொதுமக்களுக்கு இலவசமாக முழு உடல் பரிசோதனை செய்து தரப்படும் திட்டமாகும். இந்த திட்டத்தை பொறுத்த வரை பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை மருத்துவம், எலும்பியல் மருத்துவம், மகப்பேறுயியல் மற்றும் மகளிர் மருத்துவம், குழந்தை மருத்துவம், இருதயவியல் மருத்துவம், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம், பல் மருத்துவம், கண் மருத்துவம், காது, மூக்கு மற்றும் தொண்டை மருத்துவம், இயன்முறை மருத்துவம், நுரையீரல் மருத்துவம், இந்திய முறை மருத்துவம் ஆகிய அனைத்தும் இதில் இடம்பெற இருக்கிறது.

மேலும் இந்த முகாமில் அந்தந்த பகுதியைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிகளுக்கு எத்தனை சதவீதம் பாதிப்பு ஏற்பட்டு இருக்கிறது என்பதை கண்டறிந்து அங்கேயே தேசிய ஊனமுற்றோர் அடையாள அட்டை மற்றும் UD/ID உடனடியாக வழங்கப்படுகிறது. மேலும் புதிதாக முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டத்திற்கு இணைவதற்குரிய வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தின் சிறப்பு மருத்துவ அறிக்கைகள் அனைத்தும் HIMS 3.0 மூலம் கணினி மையமாக்கப்பட்டு முகாமிலேயே மருத்துவ பரிசோதனை சான்றுகள் மற்றும் மருந்து, மாத்திரைகள் வழங்கப்படுகிறது.

இம்முகாமில் பொதுமக்களுக்கு முழு உடல் பரிசோதனை செய்து மருத்துவர்களின் ஆலோசனைகளை பெற்று தேவையான நபர்களுக்கு இம்முகாமிலே மருந்து, மாத்திரைகள் வழங்கப்படும். உயர் சிகிச்சை தேவைப்படுபவர்களுக்கு அரசு தலைமை மருத்துவமனைகளுக்கு பரிந்துரைக்கப்படும். இதுபோல் ஒவ்வொரு பகுதியிலும் நடைபெறும் மருத்துவ முகாமில் சிறியவர் முதல் பெரியவர் என பொதுமக்கள் முழு அளிவில் பங்கேற்று முழு உடல் பரிசோதனை செய்து உடல் ஆரோக்கியத்தை பாதுகாப்புடன் வைத்துக்கொள்ள வேண்டும் என மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் தெரிவித்தார்.

தொடர்ந்து அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் அவர்கள் பேசுகையில்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மருத்துவத் துறையையும், கல்வித்துறையையும் இரு கண்களாக பார்த்து செயல்படுவார்கள். மனிதன் முழு ஆரோக்கியத்துடன் கல்வியைப் பெற்றால் அவன் நல்ல பொருளாதாரத்தை பெற்று சிறப்புடன் இருப்பார் என்ற நோக்குடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொது சுகாதாரத்துறைக்கும், கல்வித்துறைக்கும் தேவைக்கேற்ற திட்டங்களை உடனுக்குடன் செயல்படுத்துவார்கள். அதேபோல் மற்ற துறைகளின் வளர்ச்சியும் சிறப்பான முன்னேற்றம் காண தேவையான திட்டங்களையும் வழங்கி வருகிறார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தின் வளர்ச்சிக்கேற்ப காவிரி கூட்டு குடிநீர் திட்டம் தனித்திட்டமாக அறிவித்து விரைவில் பயன்பாட்டிற்கு வரும் நிலையில் உள்ளது. இதேபோல் ஆற்றுப் பாசனங்களுக்கு தேவையான தண்ணீர் கொண்டு வர கால்வாய்கள் சீரமைக்கப்பட்டுள்ளது. அதேபோல் மாவட்டத்தில் உள்ள மருத்துவமனைகளில் பற்றாக்குறை இல்லாத அளவிற்கு போதியளவு மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளது. அதேபோல் தேவையான மருத்துவக் கட்டடங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகிறது. இது மட்டுமின்றி தற்பொழுது நலன் காக்கும் ஸ்டாலின் மற்றும் உங்களுடன் ஸ்டாலின் திட்டம் துவங்கப்பட்டு மக்களின் வரவேற்பு தக்க திட்டமாக செயல்பட்டு வருகிறது. பொதுமக்கள் திட்டங்களில் பங்கேற்று பயன் பெற்றிட வேண்டுமென மாண்புமிகு வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் அவர்கள் தெரிவித்தார்.

தொடர்ந்து தமிழக அரசின் நாடு போற்றும் நான்காண்டு சாதனை மலர் கையேட்டினை மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் மற்றும் மாண்புமிகு வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் அவர்கள் ஆகியோர் வெளியிட்டனர்.

அதனைத் தொடர்ந்து மருத்துவத்துறையின் மூலம் 50 பயனாளிகளுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் மற்றும் முதலமைச்சரின் விரிவான காப்பீடு திட்ட அட்டை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அவர்கள் வழங்கினார்கள்.

இந்நிகழ்சிசியில் இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் கே.நவாஸ்கனி அவர்கள், இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் அவர்கள், திருவாடானை சட்டமன்ற உறுப்பினர் இராம.கருமாணிக்கம் அவர்கள், பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் அவர்கள், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் திருமதி.சுகந்தி ராஜகுமாரி அவர்கள், பொது சுகாதாரத்துறை மற்றும் நோய் தடுப்பு மருத்துவத்துறை இயக்குநர்

மரு.சோமசுந்தரம் அவர்கள், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திவ்யான்ஷீநிகம்,இ.ஆ.ப., அவர்கள், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் பேராசிரியர் மரு.அமுதாராணி அவர்கள், மாவட்ட சுகாதார அலுவலர்கள் மரு.அர்ஜுன் குமார் அவர்கள் (இராமநாதபுரம்), மரு.பொற்செல்வன் அவர்கள் (பரமக்குடி), தொண்டி பேரூராட்சி தலைவர் திருமதி.ஷாஜகான் பானு அவர்கள், திருவாடனை வட்டார மருத்துவ அலுவலர் மரு.வைதேவி அவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் மருத்துவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

காஞ்சி தெற்கு மாவட்டத்திற்கு வருகை தரும் துணை முதல்வருக்கு உற்சாக வரவேற்பு!

கழக முப்பெரும் விழாவில் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்! க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

காஞ்சிபுரம், செப்.7-

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட அவசர செயற்குழு கூட்டம் காஞ்சிபுரம் கலைஞர் பவள விழா மாளிகையில் மாவட்ட கழக அவைத் தலைவர் ச.இனிய அரசு தலைமையில் நடைபெற்றது.

தொடக்கத்தில் மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. கூட்டத்தில் கலந்து கொண்டவர்களை அனைவரையும் வரவேற்று பேசினார். மாவட்ட கழக நிர்வாகிகள் க.செல்வம் எம்.பி., திருமதி மலர்விழி குமார், சன் பிராண்டு ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.டி.அரசு, எம்.எஸ். சுகுமார், மாநில இளைஞரணி துணை செயலாளர் ப.அப்துல் மாலிக், நெசவாளர் அணி ஜி.சுகுமாரன், மாநில இலக்கிய அணி ஆர். தசரதன், செங்கல்பட்டு மாவட்ட ஊராட்சி குழு தலைவர் திருமதி செம்பருத்தி, துர்கேஷ், காஞ்சிபுரம் மேயர் திருமதி மகாலட்சுமி யுவராஜ். பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ் சிகாமணி பொன் சசிகுமார் நகர செயலாளர் கே குமார் ஒன்றிய செயலாளர்கள் கெ. ஞானசேகரன் பி.எம். குமார் க. குமணன் டி குமார். பி. சேகர் பி.எம். பாபு. சத்ய சாய் கே கண்ணன். ஜி தம்பு.. ஏழுமலை சிற்றரசு..சரவணன். எம் எஸ் பாபு.கே எஸ் ஆர் கார்த்திகேயன். பகுதி செயலாளர்கள் எஸ் சந்துரு.சு. வெங்கடேசன் கே திலகர் மாநகர நிர்வாகிகள் கே ஏ செங்குட்டுவன் ஏ எஸ் முத்து செல்வம் பேரூர் செயலாளர்கள் என்.எஸ். பாரி வள்ளல் ஆ சுந்தரமூர்த்தி. மோகன் தாஸ். வி. எழிலரசன். மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்.அ. யுவராஜ்.. வ. மலர்மன்னன்.நாத்திகம் நாகராஜன். எஸ். மாலதி. இ அசோகன் ராதாகிருஷ்ணன் ஆ. சசிகுமார். இ. எல். கண்ணன். தெய்வசிகாமணி. கலியுக கண்ணதாசன். ஜெய் கணேஷ் சுந்தரவர்தன் கே ஏ இளங்கோவன் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஆண்டோ சீரியல் ராஜ் க. பால் ராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

முடிவில் மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தீர்மானங்களை விளக்கிப் பேசினார்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழக செயற்குழு கூட்ட தீர்மானம் வருமாறு:

தீர்மானம்1

முதலீடுகளை ஈர்த்த முதல்வருக்கு நன்றி -பாராட்டு!

கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 2022 ஆம் ஆண்டு முதன் முதலாக துபாயில்192 நாடுகள் பங்கேற்ற சர்வதேச கண்காட்சியில் பங்கேற்க துபாய் சென்றார். அங்கு பல தொழில் முதலீடுகளை கொண்டு வந்து தமிழ்நாட்டை வளப்படுத்தினார்.

அடுத்த 2023 ஆம் ஆண்டில் சிங்கப்பூர், ஜப்பான் உள்ளிட்ட நாடுகளுக்கு பயணம் மேற்கொண்ட முதல்வர் அவர்கள் பல்வேறு தொழிற்சாலைகளை தமிழகத்தில் தொடங்கிட தொழில் அதிபர்களுடன் புரிந்துணர்வு மேற்கொண்டு பல ஆயிரம் கோடி முதலீடுகளை கொண்டு வந்தார். 2024 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல்வர் அவர்கள் அமெரிக்கா புறப்பட்டுச் சென்று அங்கு முதலீட்டா ளர்கள் மாநாட்டை தொடங்கி வைத்து தமிழ்நாட்டில் தொழில் தொடங்கிட முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுத்தார் என்பதையெல்லாம் நம்மால் மறக்க முடியாது. முதல்வராகப் பொறுப்பேற்று தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல் வெளிநாடுகளுக்குமம் சென்று லட்சக்கணக்கான கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்த்து தமிழ்நாட்டில் குவித்து பல்வேறு தொழிற்சாலைகளை நிர்மானிக்க காரணமாக இருந்தவர் நமது முதல்வர் அவர்கள்

அதேபோன்று நமதுகழகத் தலைவர் முதல்வர் அவர்கள் தற்போதுகடந்த 30.8.2025 அன்று சென்னையில் இருந்து ஜெர்மனிக்கு விமானம் மூலம் புறப்பட்டுச் சென்று தமிழ் நாட்டின் முன்னேற்றத்திற்காக தமிழ்நாட்டின் நலனுக்காக பல்வேறு தொழில் முதலீகளை ஈர்த்து வந்துள்ளார். அங்கே 7 ஆயிரம்கோடிக்குமேல்தமிழ் நாட்டில் தொழில்தொடங்கிட முதலீட்டாளர்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டார். அடுத்து இங்கிலாந்து சென்ற முதல்வர் அவர்கள் அங்கு 6 ஆயிரம் கோடி ரூபாய்க்கு புரிந்துணர்வு மேற்கொண்டு ஆக மொத்தம் 15 ஆயிரம் கோடிக்கு மேல் தொழில் முதலீட்டாளர்களுடன் ஒப்பந்தன் மேற்கொண்டு பல ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்குவேலை வாய்ப்பினையும் உருவாக்கிக் கொடுத்தள்ளார். இதற்கு காணகர்த்தாவான கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழக செயற்குழு பாராட்டு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றுகிறது.

தீர்மானம் 2

ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் தந்தைபெரியார் படம் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த 4 ஆம் தேதி அன்று இங்கிலாந்து நாட்டி ல் உலகப் புகழ் பெற்ற ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் பகுத்தறி பகலவன் தந்தைபெரியார் அவர்களின் உருவப்படத்தினை திறந்து வைத்து தந்தை பெரியார் அவர்களை மட்டுமல்ல நம்மையெல்லாம் பெருமை படுத்தியுள்ளார்.

தந்தை பெரியார் அவர்கள் சமூக நீதியை நிலையாட்டியது மட்டுமின்றி உலகிலே முதன் முதலில் ஆணுக்கு நிகர் பெண் என்ற சம தர்மத்தை உருவாக்க சேலத்தில் நடைபெற்ற திராவிடர் கழக மாநாட்டில் பெண்களுக்கு சொத்தில் சம உரிமை உண்டு என்ற தீர்மானம் நிறைவேற்றியர் தந்தை பெரியார் அல்லவா? அக்காலத்தில் பெண்களுக்காக போராடிய உலகத்திலேயே ஒரே தலைவர், அடித்தட்டு மக்களுக்காக தன் வாழ்நாள் கடைசிவரை குரல் கொடுத்த பெரியவர், தொட்டால் தீட்டு, கோவிலுக்குள் நுழைய தடை என்பதையெல்லாம் உடைந்தெரிந்து

இப்படிப்பட்ட பகுத்தறிவுப் பெரியவர், தமிழ்நாட்டில் பிறந்து வளர்ந்தவர், அப்படிப்பட்ட பெருமைக்குரிய தந்தை பெரியார் அவர்களின் புகழை உலகெங்கும் பரப்பிடும் வகையில், உலகப் புகழ்பெற்ற ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப் படத்தை திருந்து வைத்து தந்தை பெரியார் அவர்களுக்கு மணிமகுடம் சூட்டியுள்ளார். இப் பெருமைக்கு சொந்தக்காரரான பகுத்தறிவாளன் தந்தை பெரியார்.அவர்களின் இன்றைய பேரனாக விளங்கும் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகம் பாராட்டு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றுகிறது.

தீர்மானம்3

9 .9.2025 செவ்வாய்க்கிழமை அன்று காஞ்சிபுரத்திற்கு வருகை தரும் மாண்புமிகு துணை முதல்வரும் கழக இளைஞரணி செயலாளர் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலினெள அவர்கள் வருகை தர உள்ளதால் அவர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளில் நமது மாவட்டத்தில் உள்ள கழகத் தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு தீர்மானிக்க ப்படுகிறது..

தீர்மானம் 04

பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் கழகம் தோன்றிய நாள் தந்தை பெரியார் பிறந்த நாள் ஆகிய நிகழ்ச்சிகளை ஒன்றிணைத்து கழக முப்பெரும். விழாவை கொண்டாடும் விதமாக நமது காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள கிளைக் கழகம் மற்றும் வட்டங்கள் தோறும் சிறப்பாக கொண்டாடும் விதமாகவும் மற்றும் கரூரில் நடைபெறும் முப்பெரும் விழாவில் நமது மாவட்டத்தில் கழகத் தோழர்கள் திரளாக பங்கேற்க வேண்டுமென தீர்மானிக்க ப்படுகிறது

தீர்மானம் 05

கழகத் தலைவர் அறிவிப்புக் கிணங்க கிளைக் கழகங்கள் தோறும் கலந்துரையாடல் நடத்தி கழகத் தோழர்களை உற்சாகப்படுத்திட வேண்டும்.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட அவசர செயற்குழு கூட்டம் காஞ்சிபுரம் கலைஞர் பவள விழா மாளிகையில் மாவட்ட கழக அவைத் தலைவர் ச..இனியரசு தலைமையில் நடைபெற்றது. மாவட்ட கழகச் செயலாளர் க. சுந்தர். எம்.எல்.ஏ. கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். உடன் மாவட்ட கழக நிர்வாகிகள். க.செல்வம் எம் பி., திருமதி மலர்விழி குமார். சன் பிராண்ட் ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர் சி. வி. எம். பி. எழிலரசன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

நகர்ப்புற பசுமையாக்குதல் திட்டத்தின்கீழ்

சேலத்தில் மரக்கன்றுகள் நடும் நிகழ்வு!

அமைச்சர் இரா.இராஜேந்திரன் தொடங்கி வைத்தார்!

சேலம்,செப்.7-

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் நகர்ப்புற பசுமையாக்குதல் திட்டத்தின் கீழ் மரம் நடும் நிகழ்வினை சேலம், 5 ரோடு, ரிலையன்ஸ் மால் அருகில் நேற்று (06.09.2025) தொடங்கி வைத்தார்.

பின்னர், சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டின் வனப்பகுதியை 33 விழுக்காடு அளவிற்கு அதிகரிக்க உத்தரவிட்டு, வனப்பரப்பை அதிகரிக்க தமிழ்நாடு பசுமை இயக்கம் திட்டத்தின் மூலம் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறார்கள். அதன்படி, தமிழகத்தில் வனப்பரப்பினை அதிகரித்திடும் வகையில் பல்வேறு பகுதிகளில் மரக்கன்றுகள் நடப்பட்டு வருகிறது.

அந்தவகையில், சேலம் மாவட்டத்தில் பல்வேறு நிகழ்வுகளின் மூலம் மரக்கன்றுகள் நடவு செய்யும் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இன்றைய தினம் நகர்ப்புற பசுமையாக்குதல் திட்டத்தின் கீழ் சேலம், 5 ரோடு, ரிலையன்ஸ் மால் அருகில் பலவகை மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், வேப்பம், பூவின், புங்கை, நாவல், மூங்கில், தேக்கு உள்ளிட்ட 150 க்கும் மேற்பட்ட மரங்கள் சேலம் மாநகராட்சியின் பொது இடம் வகைப்பாட்டில் உள்ள 18,250 சதுர அடி நிலப்பரப்பில் நடப்பட்டுள்ளது. அதேபோன்று, பொது மக்களும் தங்கள் வீடுகளைச் சுற்றியுள்ள காலியிடங்களில் மரக்கன்றுகள் நடவு செய்து பராமரித்து, தமிழ்நாட்டை பசுமை மாநிலமாக மாற்றிட அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர். இரா.பிருந்தாதேவி, சேலம் மாநகராட்சி மேயர் ஆ.ராமச்சந்திரன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, சேலம் மாநகராட்சி ஆணையாளர் இளங்கோவன், துணை மேயர் திருமதி மா.சாரதா தேவி, மாநகர பொறியாளர் செல்வநாயகம், உதவி ஆணையர் திருமதி லட்சுமி, செயற் பொறியாளர்கள் பழனிசாமி, திருமதி திலகா உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.

திருப்பூர் மாவட்டம், மூலனூர் பேரூராட்சி, வார்டு எண்.6 மூவேந்தர் நகரில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர், கழக இளைஞர் அணி துணை செயலாளர் கே.இ.பிரகாஷ் தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ.11.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நியாய விலைக்கடையை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் திறந்து வைத்தனர். இதில் திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர், தெற்கு மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன், மூலனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் துரை தமிழரசு, பேரூராட்சி தலைவர், பேரூர் கழக செயலாளர் மக்கள் தெண்டபாணி உள்பட கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.